**C.C. No. 6 /2025**

**Deposition of P.W. 2**

**Dated : 15.05.2026**

**Name : திரு.ரெகு**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மருதம்பாறை பீட்டில் நான் சுமார் 3 வருடங்களாக பணியில் இருந்தேன். அந்த காலத்தில் மருதம்பாறை பீட் மற்றும் களியல் வனச்சரக பகுதியில் வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மரங்களை வெட்டியதாக வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். மருதம்பாறை பீட்டில் என்னுடைய குடியிருப்பு உள்ளது. அன்றைய தினம் குடியிருப்பில் எத்தனை நபர்கள் தங்கியிருந்தார்கள் என்றால் வாட்சர் கணேசன் தங்கியிருந்தார். மருதம்பாறை பீட்டிலிருந்து வண்ணத்துப்பாறை பீட் எவ்வளவு தொலைவு என்றால் மருதம்பாறை பீட்டிற்கு அடுத்ததாக உள்ளது. மருதம்பாறை பீட்டில் இருந்து கடையாலுமூடு மாஞ்சாக்கோடு பகுதிக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் இரவு 8 மணிக்கு வந்தேன். கடையாலுமூடு மாஞ்சாக்கோடு பகுதி எந்த பீட்டிற்கு உட்பட்டது என்றால் களியல் பீட். களியல் பீட்டில் சம்பவ சமயத்தில் யார் பணியில் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மருதம்பாறை பீட்டில் இருந்த எனக்கு களியல் பீட்டில் வாகனத்தை சோதனை செய்வதற்கு யார் அதிகாரம் வழங்கினார் என்றால் வனசரக அலுவலர். சம்பவ சமயத்தில் ஸ்ரீவல்சன் களியல் வனசரக அலுவலராக இருந்தார். களியல் வனச்சரக அலுவலகத்தில் இருந்து முழுக்கோடு எவ்வளவு தொலைவு இருககும் என்றால் சுமார் 15 கி.மீ. இருக்கும். களியல் வனச்சரக அலுவலகத்தில் இருந்து அருமனை செல்வதற்கு 3 கி.மீ. தொலைவு என்றால் சரியல்ல. 7 கி.மீ. இருக்கும். மாஞ்சாலமூடுக்கும் அருமனைக்கும் இடைப்பட்ட பகுதிதான் முழுக்கோடு பகுதி என்றால் சரிதான். வாகன தணிக்கை செய்த

கடையாலுமூடு முதல் மாஞ்சாக்கோணம் சாலை குறுகிய சாலை என்றால் சரிதான். அந்த சாலை பஞ்சாயத்துக்குட்பட்டது என்றால் சரிதான். அந்த சாலையானது அதிகமான குடியிருப்புகள் உள்ள பகுதி என்றால் சரியல்ல. மாதா குருசடி பகுதி குடியிருப்புள்ள பகுதி என்றால் சரிதான். 7 மணி முதல் 8 மணி அளவில் வாகன தணிக்கை மேற்கொண்டேன். எதிரிகள் ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தை எவ்வளவு தொலைவில் முதலில் பார்த்தோம் என்றால் சுமார் 50 அடி தொலைவு இருக்கும். தணிக்கையின்போது யார் யாா் டார்ச் லைட் பயன்படுத்தினார்கள் என்றால் வனவர் ஜெயக்குமார் பயன்படுத்தினார். வாகனத்தை நிறுத்தியவுடன் எதிரிகள் எந்த திசையில் தப்பி ஓடினார்கள் என்றால் கிழக்கு திசையை நோக்கி ரப்பர் தோட்டத்திற்குள் தப்பி ஓடினார்கள். வாகனத்தை குலசேகரம் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைக்கும்போது நேரம் சுமார் இரவு 10 மணி இருக்கும். மறுநாள் காலையில் வாகனத்தை பரிசோதனை செய்தோம். வழக்கில் எச் நமுனாவை எங்கு வைத்து தயார் செய்தோம் என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் வைத்து எச்.நமுனா தயார் செய்யப்பட்டிருந்தால் எதிரிகள் ஓட்டி வந்த வாகனத்தை உடனடியாக பரிசோதனை செய்திருந்தால் மட்டுமே 75 மரங்கள் என குறிப்பிட முடியும் என்றால் சரிதான். வாகனத்தை பரிசோதனை செய்த பின்புதான் அதில் 75 மரக்கட்டைகள் இருப்பது தெரியவந்தது என்றால் சரிதான். அதற்கு பின்புதான் எச்.நமுனா தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எத்தனை மரக்கட்டைகளில் அதன் புறத்தோல் கருகிய நிலையில் இருந்தது என்றால் சுமார் 20 மரக்கட்டைகள் அவ்வாறு இருந்தது. அவ்வாறு 20 மரக்கட்டைகளின் புறத்தோல் கருகிய இருந்ததாக எந்த ஆவணத்திலும் துலங்காது என்றால் சரியல்ல. வனச்சரக அலுவலர் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் குலசேகரம் வனச்சரக அலுவலகத்தில் விசாரித்தார். முதலில் வாகனத்தை யார் பரிசோதனை செய்தார் என்றால் அ.சா.3 மணிகண்டன் பரிசோதனை செய்தார். அப்போது

வாகனத்தை ஆர்.சி.புத்தகம், காப்பீடு, லைசன்ஸ் போன்ற ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. வாகனத்தின் முகப்பு கண்ணாடியில் எழுதப்பட்ட மொபைல் எண் யாருடையது என தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மாவட்ட உதவி வனக்காப்பாளருக்கு வாகனத்தை யார் ஒப்படைத்தார் என்றால் வனச்சரக அலுவலர் ஒப்படைத்தார். 7.6.2019 ஆம் தேதி சுமார் 12 மணி அளவில் எதிரிகளை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று விசாரித்தேன். 7.6.2019 ஆம் தேதி மருதம்பாறை பீட்டில் தான் நான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். 7.6.2019 ஆம் தேதி வனச்சரக அலுவலர் உத்தரவின் பேரில்தான் அங்கு பணிக்கு வந்தேன் என்றால் சரிதான். வெட்டப்பட்ட மரங்களின் வெட்டுமோட்டு பகுதிகளின் தொலைவு வெவ்வேறுஅளவில் இருந்தது. தரைமட்டத்தில் இருந்து வெட்டுமோட்டின் உயரம் எவ்வளவு இருக்கும் என்றால் 10 முதல் 15 செ,மீ. இருக்கும். வெட்டுமோட்டுப்பகுதி வாளால் வெட்டப்பட்டிருந்தது. நான் பார்வையிட்ட இடங்களில் எத்தனை மரக்கட்டைகள் மரங்களில் இருந்து வெட்டப்பட்டிருந்தது என சொல்லவில்லை என்றால் சரிதான். புதைந்த நிலையில் இருந்த வெட்டுமோட்டுப்பகுதியில் இருந்து எத்தனை மரக்கட்டைகள் வெட்டப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் பார்வையிட்ட வெட்டுமோட்டுபகுதி வனப்பகுதி இல்லை என்றால் சரிதான். தனியார் தோட்ட உரிமையாளரை வனச்சரக அலுவலர் விசாரித்தாரா என்றால் ஞாபகம் இல்லை. மரங்களை வெட்டுவதற்கு எதிரிகள் யார் யாரை பணியில் அமர்த்தினார்கள் என தெரிந்துகொள்ளவில்லை என்றால் ஞாபகம் இல்லை. முழுக்கோடு பகுதியில் வெட்டப்பட்ட மரங்களை எந்த சாலையின் வழியாக வரும்போது கடையாலமூடு மாஞ்காக்கோணம் பகுதியை சென்றடைந்தது என்றால் கொண்டுவரப்பட்ட மரக்கட்டைகள் முழுக்கோட்டில் வெட்டப்பட்ட மரங்கள் இல்லை. எந்த பகுதியில் இருந்து மரக்கட்டைகள் வெட்டப்பட்டது என்றால் விசாரித்தபோது எதிரிகள்

சொல்லவில்லை. அ.சா.4 ஜெயசீலன் எத்தனை மணிக்கு வனச்சரக அலுவலகத்திற்கு வந்தார் என்றால் காலை முதலே தணிக்கைக்கு வந்தார். எதிரிகள் நீதிமன்ற உத்தரவிற்கு கட்டுப்பட்டு கையெழுத்திட வரும்போது வனச்சரக அலுவலகத்தில் யார் யார் பணியில் இருநதார்கள் என்றால் தெரியாது. எதிரிகள் வாக்குமூலம் அளிக்கும்போது 7.6.2019 ஆம் தேதி சுமார் மதியம் 2 முதல் 3 மணி இருக்கும். யார் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் முழுக்கோட்டுப்பகுதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. வனச்சரகஅலுவலகத்தில் எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தேவராஜ் என்பவரிடம் இருந்து மரத்தை விலைக்கு வாங்கியதாக 2ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.4 ஜெயசீலன் யார் அழைத்ததன் பேரில் வனச்சரக அலுவலகத்திற்கு வந்தார் என்றால் வனச்சரக அலுவலர். வண்ணத்திப்பாறை பீட்டில் 30.3.2019 ஆம்தேதி மரங்களை வெட்டியதாக எதிரிகள் மீது எந்த வழக்கும் இல்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட மரக்கட்டைகள் மற்றும் வாகனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட மரங்கள் தனியார் நபர்களின் தோட்டத்திலோ களியல் வனப்பகுதியிலோ வெட்டப்பட்ட மரங்கள் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே பதிவு செய்த வைத்திருந்த வழககில் சந்தேகத்தின்பேரில் எதிரிகளை கைது செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று நான் வாகன தணிக்கை செய்யவில்லை என்றும் வனச்சரக அலுவலகத்தில் வைத்து அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.